முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 59/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | அர்ஜினன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | பெருமாள் பிள்ளை |
| வயது | .. | 41 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | இருங்கல் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ஆம் நாள் திங்கட்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 25.10.2018 தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.1, வாதியின் தகப்பனார் வாதி பெயருக்கு எழுதி கொடுத்த ஆவணத்தின் கணினி நகல் வா.சா.ஆ.2, 25.06.2021 தேதிய கிரைய ஆவணத்தின் கணினி நகல் வா.சா.ஆ.3, தாவா 1ம் இன சொத்து குறித்து வாதி பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா நகல் வா.த.சா.ஆ.4, தாவா 2ம் இன சொத்து குறித்து வாதி பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா நகல் வா.த.சா.ஆ.5, 30.11.2022 தேதிய அறிவிப்பு வா.சா.ஆ.6, தபால் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.7, அறிவிப்பு திருப்பப்பட்ட அஞ்சல் உறை வா.சா.ஆ.8, அறிவிப்பு திருப்பப்பட்ட அஞ்சல் உறை வா.சா.ஆ.9.